தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயப் பொருள்கள் சந்தைக் குழு சட்டத்தில் விரைவில் திருத்தம்

விவசாயப் பொருள்கள் சந்தைக் குழு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது குறித்து, மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஆலோசிக்க உள்ளதாக மத்திய உணவுத் துறை அமைச்சர் ராம்விலாஸ் பாஸ்வான் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். இதுகுறித்து செய்தியாளர்களிடம் மேலும் அவர் கூறியதாவது: விவசாயப் பொருள்கள் சந்தைக் குழு சட்டப்படி, காய்கறிகள், பழங்கள் உள்ளிட்ட தங்களின் விளைபொருள்களை சில்லறை-மொத்த வியாபாரிகளிடம் நேரடியாக விவசாயிகள் விற்க முடியாத நிலை உள்ளது. விவசாயிகளுக்கு உள்ள தடைகளை நீக்கும் வகையில், விவசாயப் பொருள்கள் சந்தைக் குழு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது குறித்து மாநில அரசுகளுடன், மத்திய அரசு விரைவில் ஆலோசிக்க உள்ளது. விவசாயிகள் தங்களது விளைபொருள் களை சுயவிருப்பப்படி, நாட்டின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் நேரடியாக விற்பனைச் செய்துக்கொள்ளும் வகையில், தேசியளவில் விவசாயிகளுக்கான பொதுச் சந்தையை உருவாக்க இந்த சட்டத் திருத்தம் வழிவகைச் செய்யும். இதன் மூலம், விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதுடன், இதற்காக தற்போது அவர்கள் செலுத்தும் பல்வேறு கட்டணங்களும், வரிகளும் தவிர்க்கப்படும். மேலும், காய்கறிகள், பழங்கள் உள்ளிட்டவை பொதுமக்களுக்கு குறித்த நேரத்தில் கிடைக்கும். நுகர்வோர் சட்டத்திலும் திருத்தம்: அத்தியாவசியப் பொருள்களை பதுக்குபவர் களுக்கான தண்டனைக் காலத்தை 6 மாதத்திலிருந்து ஓராண்டாக அதிகரிப்பது, பதுக்கலில் ஈடுபடுவோரை ஜாமினில் வெளிவர முடியாதபடி செய்வது உள்ளிட்ட திருத்தங்களை, நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தில் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஓராண்டுக்கு தேவையான உணவு

தானியங்கள் கையிருப்பில் உள்ளன. இந்திய உணவுக் கழகத்தை நவீனமயமாக்கவும், தானிய சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவை உயர்த்துவது குறித்து ஆராயவும், ஹிமாசல பிரதேச முதல்வர் சாந்த குமார் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவித்தார். உணவுச் சந்தையை நவீனமயமாக்க தடையாகவும், இந்த சந்தையில் தனிநபர்களின் ஆதிக்கத்துக்கு வழிவகை செய்யும் வகையிலும் உள்ள மாநில சட்டங்களில், திருத்தங்கள் கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொருளாதார ஆய்வறிக்கை ஒன்று அண்மையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## <u>நீர்ப்பாசனத் திட்டங்களை விரைந்து செயல்படுத்த பிரதமர் ஆணை</u>



விவசாயிகள் பயன்பெறும் வகையில், கிராமப்புற நீர்ப்பாசனத் திட்டங்களை விரைந்து செயல்படுத்துமாறு அரசுத் துறைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார். நிலம் கையகப்படுத்துதல் சட்டத் திருத்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததால், விவசாயிகளுக்கு எதிராக மத்திய அரசு செயல்படுகிறது என எதிர்க்கட்சிகள் விமர்சித்து வரும் நிலையில், மோடி இவ்வாறு உத்தரவிட்டுள்ளார். நீர்ப்பாசனத் திட்டம் தொடர்பாக, தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் செவ்வாய்க்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், மத்திய வேளாண்துறை அமைச்சர் ராதா மோகன் சிங், நீர்ப்பாசனத் துறை அமைச்சர் உமா பாரதி, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் செப்தரி வீரேந்திர சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். **இந்தக் கூட்டத்தில் மோடி பேசியதாவது:** கடந்த சில ஆண்டுகளில் நீர்நிலைகளை உருவாக்கவும், அதன் எல்லைகளை விரிவுபடுத்தவும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், பிரதம மந்திரியின் "விவசாய நீர்ப்பாசனத் திட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். உடனடியாக செயல்படுத்தும் வகையிலான நதிநீர் இணைப்புத் திட்டங்களை மத்திய நீர்வள

அமைச்சகம் கண்டறிய வேண்டும். நீர்ப் பாதுகாப்பு, நீர்ப்பாசனம் ஆகியவற்றில் புதிய தொழில்நுட்பங்களைக் கையாளும் ஆர்வமுள்ள விவசாயிகளைக் கண்டறிய வேண்டும். நகரங்களை ஒட்டியுள்ள கிராமங்கள் பாசன வசதி பெறும் வகையில் முக்கிய நகரங்களின் நீர் மறுசுழற்சித் திட்டங்களை ஒருங்கிணைக்க வேண்டும். மேலும், நீர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடையே அதிகரிக்க வேண்டும் என்று மோடி பேசினார்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 81.88 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரபடி 81.88 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 596 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 700 கன அடி நீரும், வாய்க்காலில் 1,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 16.70 டி.எம்.சி.

## புத்தாண்டை முன்னிட்டு கொய் மலர்கள் விலை உயர்வு விவசாயிகள் மகிழச்சி

புது வருடப் பிறப்பை முன்னிட்ட நீலகிரி மாவட்டம் குன்னூரில் உற்பத்தி செய்யப்பட்டு வெளி நாடு மற்றும் உள் நாட்டு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படும் கொய்மலர்களின் விலை உயர்ந்துள்ளதால் மலர் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் காரனேசன்,லில்லியம்.செர்ப்ரா உள்ளிட்ட மலர்களுக்கு புத்தாண்டை முன்னிட்டு பெங்களூரு போன்ற அண்டை மாநிலங்களில் நல்ல வரவேற்புள்ளதால் வழக்கமாக 3 ரூபாய் க்கு விற்க்கப்படும் காரனேசன் மலர் ரூபாய் 8 ற்கும் 14 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த ஒரு லில்லியம் மலர் ரூபாய் 24 ற்கும் விலை உயர்ந்து காணப்படுகிறது. இந்த விலையேற்றத்திற்கு முக்கிய காரணம் புத்தாண்டையொட்டி உள் நாடு மற்றும் வெளிநாடுகளுக்கு இந்த மலர்களின் ஏற்றுமதி அதிக அளவு செய்யப்பட்டு வருவதாக கொய்மலர் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இந்த விலை ஏற்றம் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். .

**அரகண்டநல்லூர் கமிட்டியில் நெல்வரத்து அதிகரிப்பு**


திருக்கோவிலூர் அருகே அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த சில நாள்களாக நெல்வரத்து அதிகரித்துள்ளது. இக்கூடத்தில் டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மட்டுமே குறைந்தபட்சம் 10 ஆயிரம் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படுவது வழக்கம். மற்ற நேரங்களில் 2 ஆயிரம் மூட்டைகள் வருவதே அரிதாகும். ஆனால் இக்கூடத்தில் கடந்த சில நாள்களாக நெல்வரத்து அதிகரித்துள்ளது. திங்கள்கிழமை மட்டும் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன. அவற்றில் வெள்ளைப் பொன்னி 1 மூட்டை (75 கிலோ) அதிகபட்சம் ரூ.1,329-க்கும், குறைந்தபட்சம் ரூ.1,280-க்கும், ஏ.டி.டி-37 அதிகபட்சம் ரூ.1,200-க்கும், குறைந்தபட்சம் ரூ.1,150-க்கும், ஏடிடி-39 அதிகபட்சம் ரூ.1,180-க்கும், குறைந்தபட்சம் ரூ.1,092-க்கும், ஏடிடி-45 அதிகபட்சம் ரூ.1,160-க்கும், குறைந்தபட்சம் ரூ.1,050-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. சென்ற வாரத்தை காட்டிலும் தற்போது மூட்டைக்கு சராசரி ரூ.100 குறைந்த விலைக்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் உளுந்து 1 மூட்டை (100 கிலோ) அதிகபட்சம் ரூ.5,700-க்கும், குறைந்தபட்சம் ரூ.4,800-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. மக்காச்சோளம் 1 மூட்டை (100 கிலோ) அதிகபட்சம் ரூ.960-க்கும், குறைந்தபட்சம் ரூ.880-க்கும், கம்பு (100 கிலோ) அதிகபட்சம் ரூ.1,569-க்கும், குறைந்தபட்சம் ரூ.1,529-க்கும், கேழ்வரகு (100 கிலோ) அதிகபட்சம் ரூ.1,769-க்கும், குறைந்தபட்சம் ரூ.1,209-க்கும், எள் (100 கிலோ) அதிகபட்சம் ரூ.6,669-க்கும், குறைந்தபட்சம் ரூ.5,800-க்கும், மணிலா (100 கிலோ) அதிகபட்சம் ரூ.3,800-க்கும், குறைந்தபட்சம் ரூ.3,650-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைகளை உடனுக்குடன் வெளியில் எடுத்துச் செல்ல வேண்டிய வியாபாரிகள், விதிமுறைக்கு மாறாக மாதக்கணக்காக இக்கூடத்தில் அடுக்கி வைத்துள்ளதால், விவசாயிகள் வேறுவழியின்றி கட்டாந்தரையில் தங்களது மூட்டைகளை வைக்கின்றனர். முட்டைகள் நனைந்தன: ஞாயிற்றுக்கிழமை மாலையில் தொடங்கி திங்கள்கிழமை மாலை வரை இப்பகுதியில் தொடர்ந்து பனிச்சாரல் போல் மழை பொழிந்தது. இதையடுத்து திங்கள்கிழமை விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டு, குடோனில் இடமின்றி திறந்தவெளியில்

கட்டாந்தரையில் வைக்கப்பட்ட மூட்டைகள் நனைந்துபோனது. எனவே இக்கூடத்தில் பெருமளவு இடத்தை ஆக்கிரமித்து அவ்விடத்தில் மூட்டைகளை அடுக்கி வைக்கும் வியாபாரிகளின் செயலை கட்டுப்படுத்த, நெல் உள்ளிட்ட பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கிடைத்திட, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சுகாதாரமான கழிப்பறை வசதியை ஏற்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விளை நிலத்தின் சிறு பரப்பில் சிறு தானிய சாகுபடி அவசியம்</u>**



முன் மாதிரியாக வழிகாட்டுகிறார் தேனி விவசாயி விளை நிலத்தின் சிறு பரப்பில் சிறு தானிய சாகுபடி அவசியம் என்று முன் மாதிரியாக இருந்து பிற விவசாயிகளையும் வலியுறுத்தி வருகிறார் தேனியை சேர்ந்த விவசாயி ரத்தினம். நாட்டுத் தக்காளி, பச்சை மிளகாய் போன்றவை தற்போதைய கால கட்டத்தில் கிடைப்பது அரிதாக உள்ளது. உயர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப வீரிய ஒட்டு நெல், காய்கறிகள், பழங்கள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்நிலையில் தேனி அருகே டொம்புச்சேரி பெருமாள்கவுண்டன்பட்டியை சேர்ந்த விவசாயி ரத்தினம், சாகுபடி பரப்பில் ஒரு பகுதியை சிறு தானியங்களை பயிர் செய்து இயற்கை வேளாண்மை குறித்து பிற விவசாயிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார். அவர் கூறியதாவது: தற்போது பயன்படுத்தப்படும் வீரிய ஒட்டு ரகங்களில் பூச்சி கொல்லி மருந்து, ரசாயன உரம் பயன்படுத்துகின்றனர். ஆண்டுக்கணக்கில் இந்த உணவு வகைகளை உண்பதால் மனிதர்களுக்கு இளம் வயதில் சர்க்கரை, ரத்த அழுத்தம் உள்ளிட்ட

புதுப்புது நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக உள்ளது. நாற்பது ஆண்டுகளுக்கு முன் இந்த பகுதியில் பெரும்பாலும் கம்பு, சோளம், சாமை, குதிரைவாலி உள்ளிட்ட சிறு தானிய பயிர்கள் பயிரிட்டு வந்தனர். அதையே உணவாகவும் உட்கொண்டு விற்பனையும் செய்து வந்தனர். ஆனால் இன்று அதிக வருவாய் ஈட்டக்கூடிய வகையில் வீரிய ஒட்டு ரக விளைபொருட்கள் சாகுபடி செய்கின்றனர். விவசாயிகளும் சிறுதானிய உணவு வகைகளை மறந்து, அரிசி உள்ளிட்ட உணவு வகைகளை நாள்தோறும் உட்கொள்வதால் அவர்களும் உடல் அளவில் பலம் இழந்து காணப்படுகின்றனர். எனவே நான் எங்களது தோட்டத்தில் உள்ள விளை நிலங்களில் மூன்றில் ஒரு பங்கில் சிறு தானிய உணவு வகைகளை பயிர்செய்கிறேன். கடந்த மூன்று ஆண்டுகளாக வறட்சி நிலவியது. இருந்தாலும் இரண்டு ஏக்கரில் குதிரை வாலி சாகுபடி செய்திருந்தேன். போதிய மழை இல்லாததால் 3 மூடை கிடைத்தது. ஆனால் தற்போது உள்ள மில்களில் பெரும்பாலும் சிறு தானியங்களை அரைத்து கொடுப்பதற்கு போதிய வசதி இல்லாமல் உள்ளனர். இதனால் இதை அரைத்து உணவு பொருளாக மாற்றுவதற்கு பெரும்பாடு பட்டுவிட்டேன். தற்போது இரண்டு ஏக்கரில் சாமை பயிர் சாகுபடி செய்துள்ளேன். 90 நாள் பயிர். கடந்த மாதம் மழை பெய்ததால் நன்கு வளர்ந்து வருகிறது. இனி எந்த வித பிரச்னையும் இல்லாம் இருக்கும். வரும் மார்கழி 10 ல் அறுவடை செய்வோம். தற்போதைய நிலையில் மூடை 5000 முதல் 6000 ரூபாய் வரை விலை போகிறது. இந்நிலை நீடித்தால் எங்களுக்கு லாபம் கிடைக்கும். மேலும் எங்கள் வீட்டு உபயோகத்திற்கும் பயன்படுத்துவோம், என்றார். இவருடன் பேச 94424 94427. **கருணாகரன், தேனி.**

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>



**கோரை சாகுபடி**: "கோரைப்பாய்' இதில் படுத்து உறங்காதவர்களே இருக்க முடியாது. இந்த பாய் நெய்வதற்கு தேவைப்படும் கோரை ஒரு நன்செய் பயிராகும். நெல்,வாழை, கரும்பு, வெற்றிலை கோரையும் பயிர் செய்யப் படுகிறது. கோரை அதிக நீரையும் தாங்கும். கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றங்கரை ஓரத்தில் உள்ள பகுதிகளான புகளூர், தோட்டக்குறிச்சி, வாங்கல், புதுப்பாளையம், நொய்யல், நெரூர், தளவாய்பாளையம், குளித்தலை போன்ற ஊர்களில் அதிகளவில் பயிரிடப்படுகிறது. கோரை சாகுபடி அனுபவ விவசாயி மா.வீரமணி, (உழவர் ஆய்வுமன்ற அமைப்பாளர், மேட்டுமருதூர், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்) தெரிவிக்கும் விபரங்கள் பற்றி அறியலாம். கோரைக்கு எப்போதும் தண்ணீர் நிற்க வேண்டும். ஆடு, மாடுகள் மேயாது. எந்த பருவத்திலும் சாகுபடி செய்யலாம். ஒருமுறை சாகுபடி செய்து விட்டால், 10லிருந்து 15 ஆண்டுகள் வரை அதனை வைத்து வருவாய் ஈட்டலாம். வியாபாரிகள் வீடு தேடி வந்து கொள்முதல் செய்து கொள்வார்கள். கோரை பயிருக்கு களிமண் நிலம் ஏற்றது. களர் நிலத்தில் கோரை சாகுபடி செய்தால் கலரும், உவர்தன்மையும் நீங்கி நிலம் செம்மையாகும். நிலத்தை நன்கு உழுது பரம்பு மூலம் சமன்படுத்தி வரப்புகள் சுத்தம் செய்து நடவு செய்ய வேண்டும். அரைஅடி உயரமுடன், வேருடன் கோரை கிழங்குகள் தேங்காய்தட்டு என்று சொல்லப்படும் பெரியதட்டில் 50 தட்டு கிழங்கு வேண்டும் ஒரு ஏக்கர் நடவுக்கு. 1 ஏக்கருக்கு உழவு கூலி ரூ.3000, வரப்பு வெட்ட ரூ.2000, நடவு கூலி ரூ.250, மாதம் ஒன்றுக்கு 2 மூடை பாக்டம்பாஸ் உரம் ரூ.1900, 3 மாதத்திற்கு பிறகு 2 மூட்டை பாக்டம்பாஸ் உரம் ரூ.1900, 2வது களை எடுக்க ரூ.1000. முதல் அறுவடைக்கு 10 மாதங்கள் ஆகும். பின்னர் வருடம் இரண்டு முறை அறுவடை செய்யலாம். தொடர்ந்து 15லிருந்து 20 வருடங்களுக்கு மேல் களை எடுத்து, வரப்பு சுத்தம் செய்து உரமிட்டால் அறுவடை செய்து கொண்டே இருக்கலாம். ஏக்கருக்கு 100 கட்டு வரை கோரை கிடைக்கும். ஒரு கட்டில் 25 முதல் 30 கிலோ வரை கோரை இருக்கும். ஒரு கட்டு கோரை 1000 ரூபாயிலிருந்து 1200 ரூபாய்

வரை விலை போகிறது. ஒரு ஏக்கரில் ரூ.40,000 முதல் ரூ.45,000 வரை வருமானம் கிடைக்கும். மேலும் விபரங்களுக்கு பா.ஏழுமலை, 96987 99572.

**லச்சக்கட்டைக் கீரை :** சளி, சுவாசக்கோளாறு, நெஞ்சுவலியைப் போக்கும். இந்த அற்புத மூலிகையை பல இடங்களில் ஒரு அழகுச் செடியாக வளர்க்கப் படுகிறது. லச்சக்கட்டைக் கீரை, சண்டிக்கீரை என பல பெயர்களில் இது அழைக்கப்படுகிறது. சிறிய மர வகையைச் சேர்ந்த, வெளுத்த, இளம்பச்சை நிறத்தில் உள்ளங்கை அகல இலைகளோடு இது காணப்படும். சளி தொந்தரவுக்கு மட்டுமல்ல, மூட்டுவலி, வாயுவினால் ஏற்படும் வயிற்று பிரச்னைகளுக்ளுமான தீர்வுகளும் இதில் இருக்கிறது. கெட்டுப்போன எலும்பு மஜ்ஜையை சரியாக்குவதால் "மஞ்ஞைக்கெட்ட கீரை' என அழைக்கப்பட்டு அது மருவி "லச்சக்கட்டை' கீரை என மாறிவிட்டது. கை,கால்,மூட்டு சண்டித்தனம் செய்யும் போது செயல்பாடு குறையும். அதை இந்த இலை சரிசெய்வதால் "சண்டிக்கீரை' எனவும் அழைக்கிறார்கள். போத்துல்கள் மூலமாக இதை இனப்பெருக்கம் செய்யலாம். மற்ற கீரைகள் போல இதையும் சமைத்து சாப்பிடலாம். அசைவப் பிரியர்கள் இந்த இலையைச் சின்னதாக அரிந்து ரத்தப் பொரியலில் போட்டு உண்ணலாம். சைவம் உண்பவர்கள் பாசிப்பருப்பில் போட்டு கடைந்தோ, பொரியல் செய்தோ சாப்பிடலாம். இதை உண்டால் கடுமையான நெஞ்சுவலி, சளி அனைத்தும் சரியாகும். இதைதினமும் சாப்பிடக் கூடாது. வாரம் ஒருமுறை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். தொடர்புக்கு : திண்டுக்கல் வனவிரிவாக்க மைய வனச்சரகர் ராஜமாரியப்பன். போன் : 99423 75314. **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>அலங்கார மீன் வளர்க்க மத்திய அரசு தரும் வாய்ப்புகள்</u>



மீன் வளர்க்கவும், மீன் பிடிக்கவும், பதப்படுத்தி ஏற்றுமதி செய்யவும், பயிற்சி, கடனுதவி, மானியம் வழங்கி வந்த இந்திய அரசின் "கடல் பொருள் ஏற்றுமதி

வளர்ச்சி ஆணையம்" இன்று அலங்கார மீன் வளர்க்கவும் மார்க்கெட் செய்யவும் ஏராளமான உதவிகள் செய்து வருகிறது. அலங்கார மீன் வளர்ப்பில் கிராமப்புறங்களில் ஏராளமான வேலை வாய்ப்புக்களை உருவாக்குகிறது. அலங்கார மீன் வளர்ப்போர், மார்க்கெட்டிங் கூட்டுறவு சங்கங்களுக்கு கட்டிடம், இதர பொருட்கள் வாங்க நிதி உதவி. உற்பத்தி, மார்க்கெட்டிங் மற்றும் ஏற்றுமதிக்கு உதவுதல் ஆகிய பணிகளை செய்கிறது. வருடத்திற்கு 60000 மீன் உற்பத்தி செய்வோருக்கு ரூ.75000, 1,60,000 மீன் உற்பத்தி செய்வோருக்கு ரூ.2 லட்சம் மற்றும் வருடத்திற்கு 5 லட்சம் மீன் உற்பத்தி செய்வோருக்கு ரூ.7.5 லட்சம், கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.5 லட்சமும் நிதி உதவி அளிக்கப்படும். சிமென்ட், தண்ணீர் தொட்டி, கண்ணாடித்தொட்டி, தண்ணீர் சுத்தம் செய்யும் கருவிகள் போன்றவற்றுக்கு வழங்கப்படும். தமிழ்நாடு அரசிடம் பதிவு பெற்ற ""அலங்கார மீன் வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கு" ஏற்றுமதி செய்ய, மார்க்கெட் செய்ய நிதி உதவி வழங்கப்படும். ஆனால் இண்டர்நேஷனல் விமான நிலையத்தில் இருந்து 30 கி.மீ தொலைவுக்குள் ஏற்றுமதியாளர் இருக்க வேண்டும். இத்திட்டம் பற்றியும், இந்திய அரசு கடல் பொருள்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க கொண்டு வந்துள்ள அனைத்து திட்டங்களையும் பற்றி அறிந்து கொள்ள உதவி இயக்குநர் (அலங்கார மீன் வளர்ச்சித் துறை) கடல் பொருள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம், House, Panampally Avenue, Kochi - 682 036, Kerrala. Ph: 0484 231 197. email: mpeda@mpeda.nic.in., www.mpeda.com. கிளை : துணை இயக்குநர், MPEDA, AH25, 4வது தெரு, 8வது மெயின் ரோடு, சாந்தி காலனி, அண்ணா நகர், சென்னை40. போன்: 044 262 69192. email : chempeda.vsnl.net. **எம்.ஞானசேகர், தொழில் மற்றும் விவசாய ஆலோசகர், 93807 55629.**

## சாமந்தி விளைச்சல் ஜோர்: விலை உயர்வால் மகிழ்ச்சி

தர்மபுரி : தர்மபுரியில், சாமந்தி பூ விலை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி, தொப்பூர், பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், 2,000ம்

ஹெக்டேர் சாமந்தி பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மார்கழி மாத துவக்கத்தில் இருந்தே, சாமந்தி பூவின் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். தொப்பூரை சேர்ந்த விவசாயி கணபதி கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில், மலர் சாகுபடியில், சாமந்தி முக்கிய பங்கு வகிக்கிறது. மாவட்டத்தில், கோ-1, கோ-2 மற்றும் மதுரை-1 ஆகிய ரகங்களையும், தோட்ட கலைத்துறை அதிகாரிகள் பரிந்துரை செய்துள்ள ரகங்களையும், கஸ்தூரி, சாந்தினி போன்ற வீரிய ரகங்களையும், விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். மாலைகள் கட்டவும், பூஜை மற்றும் அலங்காரத்துக்கும் சாமந்தி பூ முக்கிய பங்கு வகிப்பதால், ஆண்டு முழுவதும் சாமந்திப்பூவின் விற்பனை இருக்கும். மேலும், சாமந்தி பூ சாகுபடிக்கு, ஒரு ஹெக்டேருக்கு, தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், 12 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. தர்மபுரி மாவட்ட விவசாயிகள், சாமந்தி பூ சாகுபடியில், அதிக ஆர்வம் காட்டி வருவதால், சாகுபடி பரபரப்பளவு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.இதில், வீரிய ரகத்தில் கூடுதல் மகசூல் கிடைக்கிறது. தற்போது மாவட்டத்தில் நிலவும் குளுமையான சீதோஷ்ண நிலை காரணமாக, சாமந்தி பூ விளைச்சல் அதிகரித்துள்ளது. சில தினங்களுக்கு முன், விளைச்சல் காரணமாக, விலை வீழ்ச்சி அடைந்திருந்தது. தற்போது, வைகுண்ட ஏகாதசி, புத்தாண்டு உள்ளிட்டவையால், ஒரு கிலோ சாமந்திப்பூ, 35 முதல், 40 ரூபாய் வரை, வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். தொடர்ந்து, பொங்கல் உள்ளிட்ட விழாக்காலங்கள் மற்றும் திருமண முகூர்த்தங்கள் வர உள்ளதால், சாமந்தியின் விலை, மேலும் உயரும் என எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு, அவர் கூறினார்.

## <u>வேளாண் விளை பொருட்கள் ரூ.76.20 லட்சத்துக்கு ஏலம்</u>

அந்தியூர் : அந்தியூர் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு அத்தணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராபாளையம், கொளத்தூர்,சென்னம்பட்டி,பர்கூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தேங்காய்,எள்,நிலக்கடலை, மக்காச்சோளம் போன்ற வி வசாய விளை பொருட்களை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.மொத்தம் 25 ஆயிரம் தேங்காய் விற்பனைக்கு வந்தது. குறைந்தபட்ச விலை ரூ.3.50, அதிகபட்ச

விலை ரூ.14 என ரூ.இரண்டரை லட்சத்துக்கு ஏலம் போனது. கொப்பரை தேங்காய் 60 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. குறைந்தபட்சம் கிலோ விலை ரூ.78.15 முதல் அதிகபட்சமாக ரூ.95.18 வரை மொத்தம் ஒரு லட்ச ரூபாய்க்கு ஏலம் போனது.வெள்ளை ரக எள் ஆயிரம் மூட்டை விற்பனைக்கு வந்தது. கிலோ ரூ.75.69 முதல் ரூ.102.69 என ரூ.56 லட்சத்துக்கும், மக்காச்சோளம் 65 மூட்டைகள் கிலோ ரூ.11.12 முதல் ரூ.11.49 வரை ரூ.70 ஆயிரத்துக்கும் ஏலம் போனது.நிலக்கடலை ஏலத்துக்கு ஆயிரத்து 100 மூட்டைகள் வந்தது. பச் சை கிலோ ரூ.18.01 முதல் ரூ.25.51 வரை, காய்ந்தது ரூ.34.51 முதல் ரூ.43 வரை ரூ.16 லட்சத்துக்கும், ஆமணக்கு ஒரு மூட்டை கிலோ ரூ.36.66 என ஐந்தாயிரம் ரூபாய் என மொத்தம் ரூ.76 லட்சத்து 20 ஆயிரத்துக்கு வேளாண் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது.இத்தகவலை விற்பனை கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## சர்க்கரை பூசணி விளைச்சல் அதிகரிப்பு

கோபி : பொங்கல் பண்டிகை நெ ருங்கி வரும் நிலையில், கோபியில் சர்க்கரை பூசணி வி ளைச்சல் அதிகரித்துள்ளது.நடப்பாண்டில் பரவலாக மழை பொழிந்ததால், சர்க்கரை பூசணி அதிகரித்துள்ளது. ஏக்கருக்கு எட்டு டன் பூசணி விளைச்சல் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு விதைப்பு முதல் அறுவடை வரை ரூ.10 ஆயிரம் செலவாகும். இதுபற்றி வேட்டைக்காரன் கோவில் வியாபாரி கூறுகையில், "கோபி, சத்தியமங்கலம் பகுதியில் பூசணி விளை ச்சல் அதிகரித்துள்ளது. வெளிமார்க்கெட்டுக்கு 15 ரூபாய் வரை விற்பனை செய்கிறோம். அன்னதான திட்டத்துக்கு அனுப்பப்படுகிறது' என்றனர்.

## வெங்காய வணிக வளாகத்தில் ரூ.1.71 கோடிக்கு ஏல விற்பனை

பெரம்பலூர் : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகம் திறக்கப்பட்டு ஆறு மாதகாலத்தில், 1.71 கோடி ரூபாய் மதிப்பிலான, சின்ன வெங்காயம் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு உள்ளது என கலெக்டர் தரேஷ்அஹமது, தெரிவித்தார்.

செட்டிகுளத்தில் வெங்காய வணிகவளாகத்தில் ஏல முறையை நேரில் பார்வையிட்ட, கலெக்டர் தரேஷ் அகமது கூறியதாவது,தமிழகத்தில் மக்காச்சோளம், பருத்தி, சின்னவெங்காயம் உற்பத்தியில், பெரம்பலூர் மாவட்டம் முன்னனியில் உள்ளது. இங்கு, சுமார், 7,000 ஹெக்டேர் பரப்பளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வைகாசி, புரட்டாசி பட்டத்தில் அதிகளவு சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது.விவசாயிகள் வசதிக்காக, செட்டிக்குளத்தில், 114.9 லட்சம் ரூபாய் மதிப்பில், 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கும், வெங்காய வணிக வளாகமும் ஏற்படுத்தப் பட்டு, கடந்த ஜூன் மாதம் திறக்கப்பட்டது. இதுவரை 3,543 விவசாயிகள் கொண்டு வந்த, 878.17 மெட்ரிக் டன் சின்ன வெங்காயத்தை, இடைத்தரகர் மற்றும் கட்டணமின்றி, ஒரு கோடியே, 71 லட்சத்து, 59 ஆயிரத்து, 542 ரூபாய்க்கு ஏல முறையில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.இதில், டிச., 21ம் தேதி அதிகபட்சமாக, 63.5 மெ.டன் சின்ன வெங்காயம், 11.12 லட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. விரைவில், நாள் ஒன்றுக்கு, 100 டன் சின்ன வெங்காயம் விற்பனை நடைபெறும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில், இந்தாண்டில் (2014 ண 15) இதுவரை, 5,606 ஹெக்டேர் பரப்பளவில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் ஏப்ரல் முதல், செப்டம்பர் வரை, காரிப்பருவத்தில் 1,394 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டதில், சுமார் 12,546 மெ.டன் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டுள்ளது.அக்டோபர் முதல், மார்ச் வரை, ராஃபி பருவத்தில், அக்டோபர் முதல், இதுவரை, 4,212 ஹெக்டேர் பரப்பளவில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மிளகாய் சாகுபடிக்கு தேசிய இன்சூரன்ஸ்</u>

ராமநாதபுரம்: மிளகாய் பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயிர் இன்சூரன்ஸ் பெற ஜன., 15 க்குள் விண்ணப்பிக்குமாறு, தோட்டக்கலை துணை இயக்குனர் கங்காதரன்

தெரிவித்துள்ளார்.அவர் கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம், திருவாடானை வட்டாரங்கள் நீங்கலாக பிற வட்டாரங்களில், மிளகாய் பயிரிடும் விவசாய கடன் பெறாத விவசாயிகள், ஜன., 15 க்குள் காப்பீடு திட்டத்தில் பிரிமியத் தொகை கட்ட வேண்டும். நடப்பாண்டில் மிளகாய் பயிர்க்கான இன்சூரன்ஸ் தொகை ஒரு ஏக்கருக்கு 1,672 ரூபாய். மொத்த பிரிமியத் தொகை ரூ. 167. இதில் அரசு வழங்கும் மானியம் நீங்கலாக சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத்தொகை ரூ. 75. இதர விவசாயிகள் ரூ.84 செலுத்த வேண்டும். எனவே, மிளகாய் இன்சூரன்ஸ் பெற விரும்பும் விவசாயிகள் வி.ஏ.ஓ.,க்களிடம் பயிர் சாகுபடி செய்துள்ளதற்கான அடங்கல் நகல் பெற்று, உரிய காலக் கெடுவிற்குள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பணம் செலுத்தி பயனடையலாம், என்றார்.

**தினகரன்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## திருச்செங்கோட்டில் 2500 மூட்டை மஞ்சள் ரூ1.25 கோடிக்கு விற்பனை

திருச்செங்கோடு, : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 2500 மூட்டை மஞ்சள் ரூ ஒரு கோடியே 25 லட்சத்திற்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் (27ம் தேதி) மஞ்சள் ஏலம் நடைபெற்றது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை, ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து வந்திருந்த 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கொள்முதல் செய்து சென்றனர். இதன்படி, 2500 மூட்டை மஞ்சள்

டெண்டர் மூலம் ரூ ஒருகோடியே 25 லட்சத்திற்கு விற்பனையானது. இதில், விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ 6,868 முதல் ரூ10,555 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ6,177 முதல் ரூ8,449 வரை விலைபோனது. பனங்காளி ரகத்திற்கு ரூ9,767 முதல் ரூ13,777 வரை விலை கிடைத்தது. கடந்த வாரம் 2,500 மூட்டை மஞ்சள் ரூ ஒரு கோடிக்கு மட்டுமே விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

**<u>ரூ.48.14 லட்சத்துக்கு பருத்தி ஏலம்</u>**

அனுப்பர்பாளையம், ; அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெறுகிறது. நேற்று நடைபெறற ஏலத்திற்கு 2 ஆயிரத்து 800 மூட்டைகளில் பருத்தி கொண்டு வரப்பட்டது. ஏலத்தில், கோபி, நம்பியூர், கிணத்துக்கடவு, குன்னத்தூர், செங்கப்பள்ளி, தர்மபுரி, கொள்ளேகால், நொக்கனூர், ஆத்தூர், ஆகிய பகுதிகளிலிருந்து 414 விவசாயிகளும், அவிநாசி, திருப்பூர், பல்லடம், கோ வை, ஈரோடு பகுதியிலி ருந்து 19 வியாபாரிகளும் பங்கேற்றனர். மொத்தம் ரூ. 48.14 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. சீசன் மீண்டும் துவங்கியதால், சென்ற வாரத்தைவிட பருத்தி வரத்து அதிகரித்திருந்தது. மேலும் சென்ற வாரத்தைவிட டி.சி.எச். ரகப்பருத்தி குவின்டாலுக்கு ரூ.100 வரை விலை அதிகரித்தது. இதில், டி.சி.எச். ரகப்பருத்தி குவின்டால் ஒன்றுக்கு ரூ.4800 முதல் 5105 வரையிலும், ஆர்.சி. எச் ரகப்பருத்தி குவின்டால் ஒன்றுக்கு ரூ. 3800 முதல் ரூ. 4450 வரையிலும், மட்ட ரகப்பருத்தி ரூ. 2000 முதல் ரூ. 3000 வரையிலும் ஏலம் போனது. எல்.ஆர்.ஏ. ரகப்பருத்தி வரத்து இல்லை.

**<u>சம்பா நெற் பயிரில் இலைச் சுருட்டுப் புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்</u>**

அன்னவாசல், : சம்பா நெற்பயிரில் இலைச் சுருட் டுப் புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான், குடுமியான் மலை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் சாந்தி, வேளாண்

அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து அவர்கள் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் குறிப்பாக, அன்னவாசல், விராலிமலை, குன்றாண்டார்கோயில், கீரனூர் பகுதிகளில் இலைச்சுருட்டுப் புழுக்களின் தாக்குதல் ஆங்காங்கு காணப்படுகிறது. முட்டைகளில் இருந்து வெளிவரும் புழுக்கள் இலைகளை நீளவாக்கில் மடித்துச் சேதப்படுத்துகின்றன. சுருட்டப்பட்ட இலைச் சுருள்களுக்குள் புழுக்கள் இருந்து கொண்டு பச்சையத்தைச் சுரண்டி உண்பதால் இலைகளில் வெள்ளை வெள்ளையாகக் காணப்படும். இப்புழுவால் தாக்கப்பட்ட இலைகள் வெளிறித் தோன்றுவதுடன் பயிரில் ஒளிச்சேர்க்கை குறைந்து வளர்ச்சி குன்றிவிடுகிறது. புரட்டாசி முதல் மார்கழி வரை இப்பூச்சியின் தாக்கு தல் மிகுதியாக இருக்கும். இப்பூச்சி தாக்குதலை வயல்களில் அந்துப் பூச்சிகள் பறப்பதில் இருந்து தெரிந்து கொள்ளலாம். விளக்குப் பொறியால் பெருமளவில் தாய் அந்துப் பூச்சிகள் கவரப்படும். பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே உரமிட வேண்டும். தேவைக்கேற்ப மட்டும் தழைச்சத்து இட்டும், இப்பூச்சி மிகுதியாகத் தோன்றும் இடங்களில் ரசாயன உரங்களைத் தவிர்த்தும் குறைக்கலாம். தழைச் சத்தை பிரித்து 3 அல்லது 4 முறையாக இட வேண்டும். டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2சிசி எனும் அளவில் நட்ட 37, 44 மற்றும் 51வது நாட்களில் வயல்களில் விட வேண்டும். முன்னிரவு நேரங்களில் விளக்குப் பொறிகளால் கவரப்படும் பூச்சிகளின் எண்ணிக்கையைக் கணித்து, தேவைப்பட்டால் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தலாம் என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>காற்றழுத்த தாழ்வு பகுதி நீடிப்பு: தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் தகவல்</u>**

சென்னை, காற்றழுத்த தாழ்வு பகுதி வங்க கடலில் நீடிப்பதால் தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காற்றழுத்ததாழ்வுபகுதி

தென்மேற்கு வங்க கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. சென்னையில் நேற்று முன்தினம் இரவு முதல் காலை வரையிலும் இடைவிடாமல் மழை கொட்டி தீர்த்தது. பகல் நேரத்தில் வானம் மேகமூட்டத் துடன் காணப்பட்டது. காற்றழுத்த தாழ்வு பகுதி வடக்கு நோக்கி நகர்ந்து செல்வதால் தமிழகத்தில் படிப்படியாக மழை குறையும் என்று வானிலை ஆய்வு மையம்தெரிவித்துள்ளது.

கனமழைநீடிக்கும்

இதுகுறித்து சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன்நிருபர்களிடம்கூறியதாவது:-

வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வடக்கு இலங்கைக்கும், தமிழகத்தை ஒட்டியுள்ள வங்க கடலில் நிலைகொண்டிருந்தது. இது தற்போது வடக்கு நோக்கி நகர்ந்து வட தமிழகம் மற்றும் தென் ஆந்திரா அருகேயுள்ள வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக தொடர்ந்து நீடிக்கிறது. இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் வட கடலோர மாவட்டங்களில் பெய்து வரும் கனமழை நீடிப்பதற்கு வாய்ப்பு உள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒருசில இடங்களில் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.சென்னையில்...

சென்னையை பொறுத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்றழுத்த தாழ்வு பகுதி வடக்கு நோக்கி நகர்ந்து செல்வதால் அடுத்த சில நாட்களில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை படிப்படியாக குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

எண்ணூரில்10செ.மீ.மழை

நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவுவிவரம்வருமாறு:-

எண்ணூர், கேளம்பாக்கத்தில் தலா 10 செ.மீ., சத்யபாமா பல்கலைக்கழகம், சென்னை டி.ஜி.பி. அலுவலகம், அண்ணா பல்கலைக்கழகம், வடசென்னை, தரமணியில் 9 செ.மீ., புழல், செங்குன்றத்தில் தலா 8 செ.மீ., சென்னை விமான நிலையம், மகாபலிபுரத்தில் 7 செ.மீ., தாம்பரத்தில் 6 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. செங்கல்பட்டு, பொன்னேரி, திருமங்கலம், பூந்தமல்லி தலா 5 செ.மீ. மழை, சோழவரம், காட்டுப்பாக்கத்தில் 4 செ.மீ., ஸ்ரீபெரும்புதூர், சிவகரி, அம்பாசமுத்திரம், தரங்கம்பாடியில் தலா 3 செ.மீ., ஸ்ரீவைகுண்டம், கமுதி, பரங்கிப்பேட்டை, திருவள்ளூர், சாத்தான்குளம், சிவகாசியில் 2 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

## கடலூர் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 29 மில்லி மீட்டர் பதிவு கடல் சீற்றத்தால் 2–வது நாளாக மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை

கடலூர், கடலூர் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 29 மில்லி மீட்டர் மழை பதிவாகியது. கடல் சீற்றத்தால் 2–வது நாளாக மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

### கன மழை

தென்மேற்கு வங்கக்கடலில் கடந்த சில தினங்களுக்கு முன்பு உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக கடலூர் மாவட்டத்தில் கன மழை பெய்தது. அதன்பிறகு மழை இல்லை. இதற்கிடையில் இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலை கொண்டிருந்த தாழ்வு பகுதியால் கடந்த 2 நாட்களாக கடலூர் மாவட்டத்தில் சாரல் மழை பெய்து வந்தது. நேற்று முன்தினம் ஆரம்பித்த சாரல் மழை இரவில் கன மழையாக பெய்ய தொடங்கியது. இந்த மழை நேற்று காலை வரை நீடித்தது.

இந்நிலையில் தென்மேற்கு வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் தொடர்ந்து நீடித்து வருவதால் கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.

### 2–வது நாளாக மீன்பிடிக்க செல்லவில்லை

அதன்படி நேற்று காலை முதல் மாலை வரை கடலூரில் கன மழை பெய்து கொண்டே இருந்தது. சில இடங்களில் லேசான சாரல் மழையும் பெய்தது. இந்த

மழையினால் தாழ்வான இடங்களில் மழை நீர் தேங்கி நின்றது. முக்கிய சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கடலூர் தேவனாம்பட்டினம், தாழங்குடா, சோனாங்குப்பம் உள்பட பல்வேறு இடங்களில் 2–வது நாளாக கடல் சீற்றமாக இருந்தது. கடல் நீரோட்டத்திலும் மாற்றம் ஏற்பட்டது. இதனால் கடலூர் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க செல்லும் தேவனாம்பட்டினம், சொத்திக்குப்பம், சோனாங்குப்பம், அக்கரைக்கோரி உள்பட 25–க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் மீன்பிடிக்க 2–வது நாளாக கடலுக்கு செல்லவில்லை. இதையடுத்து மீனவர்கள் தங்கள் படகுகளை மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தி வைத்திருந்தனர். சிறிய வகை படகுகளை தங்கள் பகுதி கடற்கரையோரம் மீனவர்கள் நிறுத்தி வைத்திருந்தனர்.

<u>மழை அளவு</u>

இதேபோல் பரங்கிப்பேட்டை, அண்ணாமலைநகர், ஸ்ரீமுஷ்ணம், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், லால்பேட்டை, விருத்தாசலம், பண்ருட்டி உள்பட பல்வேறு இடங்களில் கன மழை பெய்தது. இந்த மழையினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பரங்கிப்பேட்டையில் 29 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. குறைந்த பட்சமாக கீழ்செறுவாயில் 5 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் சராசரியாக 15.44 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. மாவட்டத்தில் பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:–

அண்ணாமலைநகர்–26

லால்பேட்டை–24

காட்டுமன்னார்கோவில்–24

சிதம்பரம்–21.40

ஸ்ரீமுஷ்ணம்–21

கொத்தவாச்சேரி–19

கடலூர்–19

புவனகிரி–18

வேப்பூர்–17.50

காட்டுமயிலூர்–15

வானமாதேவி–14.40

சேத்தியாத்தோப்பு–13

பெலாந்துறை–11

குப்பநத்தம்–9.40

விருத்தாசலம்–8.30

தொழுதூர்–8

மே.மாத்தூர்–8

லக்கூர்–7

பண்ருட்டி–6.20

## ஈரோட்டில் இந்த ஆண்டு முதல் முறையாக மஞ்சள் விலை குவிண்டால் ரூ.9 ஆயிரத்தை தாண்டியது



ஈரோடு, ஈரோட்டில் இந்த ஆண்டு முதல் முறையாக மஞ்சள் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.9 ஆயிரத்தை தாண்டி ஏலம் போனது.

### மஞ்சள் விலை சரிவு

ஈரோட்டில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு மஞ்சள் விலை குவிண்டால் ஒன்று ரூ.19 ஆயிரத்தை தாண்டி விற்பனை ஆனது. இதனைத்தொடர்ந்து ஈரோடு மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் மஞ்சளை பயிரிட்டனர். இதனால் மஞ்சள் உற்பத்தி அதிகரித்தது. அதனால் மஞ்சள் விலை குவிண்டால் ரூ.3 ஆயிரத்துக்கு விலை குறைந்து விற்பனை ஆனது. எனவே மஞ்சள் பயிரிட்ட விவசாயிகள் பெரிதும் நஷ்டம் அடைந்தனர். பின்னர் கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக மஞ்சள் விலை ரூ.2 ஆயிரத்து 500–ல் இருந்து ரூ.7 ஆயிரம் வரை விலை ஏறுவதும், விலை இறங்குவதுமாக இருந்தது. இந்தநிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு மஞ்சள் விலை குவிண்டால்

ஒன்று ரூ.8 ஆயிரத்தை தாண்டியது. பின்னர் இந்த விலை ரூ.6 ஆயிரத்து 500–க்கு குறைந்தது.

ரூ.9 ஆயிரத்தை தாண்டியது

இந்தநிலையில் நேற்று ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் விரலி மஞ்சள் குவிண்டால் ஒன்று குறைந்தபட்சமாக ரூ.8 ஆயிரத்து 69–க்கும், அதிகபட்சமாக ரூ.9 ஆயிரத்து 209–க்கும் ஏலம் போனது. தனி கிழங்கு மஞ்சள் குவிண்டால் ஒன்றுக்கு குறைந்தபட்சமாக ரூ.7 ஆயிரத்து 699–க்கும், அதிகபட்சமாக ரூ.8 ஆயிரத்து 569–க்கும் விற்பனை ஆனது.

இந்த ஆண்டில் முதல் முறையாக மஞ்சள் விலை குவிண்டால் ஒன்று ரூ.9 ஆயிரத்தை தாண்டி ஏலம் போனது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் பல விவசாயிகள் தங்கள் மஞ்சளை இருப்பு வைக்க தொடங்கி உள்ளனர்.

## பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் 44 பேருக்கு விலையில்லா ஆடுகள்



பள்ளிப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம் பெருமாநெல்லூர் மற்றும் ராமசந்திராபுரம் ஊராட்சிகளில் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளுக்கு அருண் சுப்பிரமணியன் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர் டி.டி.சீனிவாசன், முன்னாள் அரசு தலைமை கொறடா பி.எம். நரசிம்மன், ஒன்றிய குழு தலைவர் எஸ்.சாந்தி ப்ரியா சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் ரமணா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 44 பேருக்கு விலையில்லா ஆடுகளை வழங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் அருணா பழனி, தனலட்சுமி பரசுராமன், கிருஷ்ணமநாயுடு, கால்நடை துறை உதவி இயக்குனர் செல்லதுரை, கால்நடை மருத்துவர்கள் கீதா, தம்பிதுரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.